வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
12.02.2025 புதன்கிழமை
இதழ் : 44
பக்கங்கள் : 12




# புதிய அரசமைப்பு விவகாரத்தில் தமிழ் தலைமைகளே ஒன்றுபடுக

## தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

தேர்தல்கால கூட்டிணைவுகளுக்கு அப்பால் தமிழர் தேசம் முகங் கொடுக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இயங்குவது மிகமுக் கியமானதாகும். அதன்படி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக்கட்சிகள் பாராளுமன்றத்தின் ஊடாக முன்வைக்கப்படக்கூடிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் கருத்தொருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அப்போது நிலைப்பாடானது திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலும், தமிழர் தேசம், சுயநிர்ணய உரிமை, இறைமை மற்றும் வடக்கு - கிழக்கு தாயகம் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பு ஆகிய விடயங்களில் விட்டுக்கொடுப்பின்றியும் அமையவேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தி யுள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தினால் வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதைத் தமது பாராளுமன்றப் பதவிக்காலத்துக்கான செயல்திட்டங்களில் ஒன்றாக அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், அரசியலமைப்பு தீர்வு தொடர்பான தேசிய மக்கள் சக்தியின் கடந்தகால நிலைப்பாடுகள், அந்தத் தீர்வு ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்ற நம்பிக் கையைத் தமிழ்

11

## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று ஆரம்பம்!

### இன்றைய தினமும் தொடரும்



யாழ்ப்பாணம், பெப். 12

“தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்ற வேண்டும், காணிகள் மீண்டும் உரிமையாளர்களிடம் வழங்கப்பட வேண்டும்”, என்று வலியுறுத்தி நேற்று

11

## கஜேந்திரகுமார் எம். பிக்கு நீதிமன்று அழைப்பாணை!

யாழ்ப்பாணம், பெப். 12

தையிட்டி விகாரைக்கு எதிராக கஜேந்திரகுமார் எம். பி. விடுத்தார் என்று கூறப்படும் போராட்ட அழைப்பு தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் கஜேந்திரகுமார் எம். பிக்கு நேற்று அழைப்பாணை அனுப்பியுள் ளதாகத் தெரிய வருகின்றது.

11

## மின் தடைக்கு காரணம் என்ன? அரசு வெளிப்படுத்தவேண்டும்!

### நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து



கொழும்பு, பெப். 12

நாடு தழுவிய மின் தடைக்கு காரணம் என்ன என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப் படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய

11



## நல்லூரில் தைப்பூச திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 12

சைவ தமிழ் கடவுளான முருகப் பெருமானின் திருவிழாக்களில் முக்கியமான தைப்பூச திருவிழா நேற்று மாலை யாழ்ப்பாணம் நல்லூர்

11

## ஏப்ரல் 24 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்?

### நகர்வுகளை மேற்கொள்ளும் அரசு

கொழும்பு, பெப். 12

உள்ளூராட்சி சபை தேர்தல்களை, தேர்தல் ஆணையம் வரும் ஏப்ரல் 24ஆம் திகதி நடத்துவதற்கான அறிவிப்பை விடுப்பதற்கு வசதி செய்யும் விதத்தில் அவசர அவசரமாகக் காய்களை பாராளுமன்றத்தில் நகர்த்துகின்றது தேசிய மக்கள் சக்தி அரசு.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிலுவையில் உள்ளது. அது, இன்று நள்ளிரவு 12

11

## உத்தியோகபூர்வ கடிதம் அனுப்பினால் மகிந்த வீட்டை விட்டு வெளியேறுவார்!

### கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வ அரச இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு சிவில் அமைப்பினர் குறிப்பிடவேண்டியதில்லை. வீட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட வேண்டிய தேவையுமில்லை. வீட்டை விட்டு வெளியேறுமாறு அரசாங் கம் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பினால் மகிந்த ராஜபக்ஷ

11

## வடக்கு, கிழக்கில் கிராமிய வீதிகளை புனரமைக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, பெப். 12

வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் காணப்படும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கும் மற்றும் மேம்படுவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள் ளது.

கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்தல் அரசாங் கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் முக்கிய பணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீதியைப் புனரமைப்புச் செய்தல்,

11

## இன்று மின்வெட்டு இல்லை!

கொழும்பு, பெப். 12

நாளை மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. மின் வெட்டை தொடர்ந்தும் அமுல்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

11

## 7 ஆயிரத்துக்கும் அதிகமானோரை அரச சேவையில் இணைக்க அனுமதி

கொழும்பு, பெப். 12

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேர அட்டவணையை அடையாளம் கண்டு, அது தொடர்பாக கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய அளவு இனங் காணப்பட்டுள்ளது.

அதன்படி, 7,456 பேர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இதற்காகத் தேவையான நடவடிக் கைகளை எடுக்கப் பிரதமரின் செயலாளர்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த கொலை சம்பவத்தில் மறைக்கப்பட்ட ஆதாரங்கள்!

## புதிய நடவடிக்கையில் பாதுகாப்புத்துறை

கொழும்பு, பெப். 12

**லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மறைக்கப்பட்ட சாட்சிகளை, ஆதாரங்களை தேடும் புதிய நடவடிக்கையை பாதுகாப்புத்துறை ஆரம்பித்துள்ளதாக அறியமுடிகின்றது.**

அதேசமயம் லசந்த கொலை, அவரது சாரதி கடத்தல் முயற்சி போன்றவற்றில் சந்தேக நபர்களாக கருதப்படுவோர்மீது சாட்சியங்கள் இருப்பின் அவற்றை தொகுத்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் திணைக்களமும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

லசந்த கொலை தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத காரணத்தினால் அதில் அரசியல் அழுத்தங்கள் உள்ளனவா என்பது குறித்து ஆராயுமாறு கடந்த வாரம் சட்ட மா அதிபர் பாரிந்த ரணசிங்கவுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பான சட்ட மா அதிபரின் விருப்புரிமை மற்றும் நடைமுறைகளில் அமைச்சரவை அல்லது அரசியல் அதிகாரிகள் தலையிடக்கூடாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது. (அ)

# முகமாலையில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளை பார்வையிட்ட ஜப்பான் தூதுவர்!



கிளிநொச்சி, பெப். 12

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா, தூதரக அதிகாரிகள், கிளிநொச்சி பளை மற்றும் முகமாலைப் பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன், கண்ணிவெடி அகற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை பளை மற்றும் முகமாலைப் பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டனர்.

இதன்போது குறித்த பகுதியில் வெடிபொருட்கள் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும், இந்தப் பகுதியில் மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் வெடிபொருடகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

ஜப்பான் நிதிப்பங்களிப்புடன் பளை மற்றும் முகமாலை பகுதியில் டாஸ், ஹலோ ட்ரஸ்ட் மற்றும் சாப் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கூறிப்பிடத்தக்கது. (அ)

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிரெடுத்தல் நிகழ்வு



யாழ்ப்பாணம், பெப். 12

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நெற்புதிரெடுத்தல் (அறுவடை ) நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் "புதிர் தினம்" எனும் இந்த பாரம்பரிய நிகழ்வில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்குச் செல்வார்கள்.

அந்த வயலில் பூசை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து நல்லூர் கந்தசுவாமிக்கு படையல் வைத்து பூசைகள் செய்வது வழக்கம்.

அவ்வாறே இம்முறையும் இடம்பெற்ற படையல் பூசைகளை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

இவ்வழிபாட்டு முறை நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மரபுசார் பண்பாட்டு விழாவாக பேணப்பட்டு வருகிறது.

இப்புதிர் விழா 291ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரத்த தான முகாம்

வடமராட்சி, பெப். 12

கரவெட்டி - கன்பொல்லை செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சீவரத்தினம், செல்வராசா, வேலும்மயிலும் ஆகியோர் ஞாபகார்த்தமாக நடைபெறும் இந்த இரத்ததான முகாம் செஞ்சுடர் விளையாட்டுக்கழக மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

## கப்பல் சேவை இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், பெப். 12

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையானது இன்று புதன்கிழமை நடைபெறாது என கப்பல் நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

சிறிய தொழில்நுட்ப கோளாறு காரணமாக கப்பல் சேவை இன்று நடைபெறாது என்றும் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ -5)

# தையிட்டியில் விகாரை அகற்றப்படவேண்டும்!

கொழும்பு, பெப். 12

தையிட்டி விகாரையை பொறுத்தவரை அது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது, அது அகற்றப்படவேண்டும் என மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு பகுதிகளிலே தமிழர் பிரதேசங்களை கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகள் பல்வேறு தடவைகளில் இடம்பெற்றுள்ளன. நாங்களும் அதற்கான எதிர்ப்புகளை தொடர்ச்சியாக பதிவு செய்து கொண்டு வருகின்றோம்.

குறிப்பாக தையிட்டி என்ற பிரதேசத்தில் தனியாருக்கு சொந்தமான காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக ஒரு விகாரையை கட்டி முடித்திருக்கின்றார்கள். இராணுவத்தின் உதவியுடன், இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாக இந்த விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சம்மேளனம் கிட்டத்தட்ட 14 ஏக்கர் தனக்கு சொந்தமானது என எந்த வித பொறுப்பும் இல்லாமல், ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இலங்கையின் சட்டத்தின் படி ஒருவருடைய இடத்திற்கு சென்று, நீங்கள் ஒரு கட்டிடத்தை கட்டினால் அந்த இடம் அகற்றப்பட்டு அதன் உரிமையாளருக்கு கையளிக்கப்படவேண்டும். இந்த சட்டம் பௌத்தபேரினவாதத்திற்கு மாத்திரம் விதிவிலக்கானது என எங்கும் குறிப்பிடப்படவில்லை.

அரசியல் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு தங்களிற்கு தேவையானது போல சட்டத்தை வளைத்துக் கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இந்த நாட்டில் நடைபெறுகின்றன.

தையிட்டி விகாரையை பொறுத்தவரை அது சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ளது. அது அகற்றப்படவேண்டும். ஏனென்றால் அந்த மக்கள் வேறு ஒரு இடத்திலே தங்களிற்கு தேவையான காணியை பெறுவதற்கு தயாராகயில்லை.

சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட் நிலத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்துக்கு வடக்கு ஆளுநர் எந்த அடிப்படையில் ஆதரவை வழங்குவார் என்ற கேள்வி எமக்குள்ளது.

ஆளுநரின் வீட்டுக்கு சென்று நாளை யாராவது அவரது வளவிற்குள் விகாரையை அமைத்துவிட்டு வேறு காணிகளை வழங்கினால் அவர் அதனை ஏற்றுக்கொள்வாரா?-என்றார். (அ)

# இவ்வருடத்தில் இதுவரை 89 இந்திய மீனவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 12

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 89 இந்திய மீனவர்கள் 10 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார், நெடுந்தீவு மற்றும் பருத்தித்துறை கடற்பரப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவிக்கின்றது.

அத்துடன், தொடர்ச்சியாக விளக்கமறியலில் உள்ள மீனவர்களுக்கான வழக்கு விசாரணைகளை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கைக் கலாசாரத்தை அழிக்க நிதியளித்த யு.எஸ்.எய்ட் நிறுவனம்

கொழும்பு, பெப். 12

இலங்கையில் கலாசாரத்தை அழித்து மக்கள் தொகையைக் குறைக்க வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்கு யு.எஸ்.எய்ட் நிறுவனம் 7.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

எலான் மஸ்க்கின் கூற்றுப்படி, இலங்கை திட்டங்களுக்கு யு.எஸ்.எய்ட் 7.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது. இது, 2400 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமானதாகும் என்று அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக இளைஞர்களிடையே பாலின மாற்றத்தை ஊக்குவிக்கவும் இறுதியில் மக்கள் தொகையைக் குறைக்கவும் திட்டங்களை யு.எஸ். எய்ட் வடிவமைத்ததாக வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகம் அதிக மக்கள் தொகை கொண்டது என்றும், எனவே நோய்களை உருவாக்குவதன் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பில் கேட்ஸ் ஒருமுறை கூறினார்.

நோய்களைக் குணப்படுத்த, தடுப்பூசிகள் தேவை என்ற வகையில் அந்த செயல் வணிகங்களையும் மேம்படுத்துவதற்கான ஒரு சதி என்றும் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.02.2025 புதன்கிழமை
பிலவ வருடம், தை 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## வேகமாக மாறிவரும் உலக அரசியல்

உலக அரசியல் என்றுமில்லாதவாறு அதிகார சக்திகளின் போட்டிக்களமாக மாறிவருகின்றது. டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் நிலைமைகளை எவ்வாறு கையாளப் போகின்றது - அதற்கு சீனாவின் எதிர்வினைகள் எவ்வாறு அமையப் போகின்றன. அமெரிக்க - சீன உலகளாவிய போட்டியில் மேற்குலகும் கிழக்குலகும் எவ்வாறு எதிர்வினையாற்றப் போகின்றன என்பதைக் கொண்டே, உலக அரசியல் தீர்மானிக்கப்படப் போகின்றது.

ட்ரம்பின் அறிவிப்புகள் ஒருபுறம், அவரின் மிரட்டிவிட்டு அமைதியடையும் வழமையான பேச்சுகளாக நோக்கப்பட்டாலும்கூட, அவரின் அனைத்து அறிவுப்புகளுமே அவ்வாறான தன்மையுடையவையல்ல. ட்ரம்பின் முதல் நிர்வாகத்தின்போது சீனாவுக்கு எதிரான கடும் தொனி பிரசாரங்கள் முடக்கிவிடப்பட்டன. அமெரிக்காவின் பிரதான பிரச்னை சீனா என்பதாகவே அமெரிக்க வெளிவிவகார அணுகுமுறை மாறியது. பின்னர் அதிகாரத்தை கைப்பற்றிய பைடன் நிர்வாகம் ட்ரம்ப் தொடர்பில் எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தபோதிலும்கூட, சீனா தொடர்பான அணுகுமுறைகளில் ட்ரம்பின் நிர்வாகத்தின் அணுகுமுறையையே பைடன் நிர்வாகமும் தொடர்ந்தது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் கட்சிரீதியில் மோதுவது. ஒருவரையொருவர் கடுமையாக சாடுவது என்பதெல்லாம் உள்நாட்டு அரசியல் விவகாரம் மட்டும்தான். சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரையில் அமெரிக்க நலன் என்பதில் அனைவரும் ஒன்றாகவே இருக்கின்றனர். சீனா தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் அணுகுமுறையையே பைடன் நிர்வாகம் மென்போக்கில் முன்னெடுத்தது.

தற்போது ட்ரம்பின் இரண்டாவது நிர்வாக காலத்தில் சீனா தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளை எடுப்பதற்கான வாய்ப்பே தெரிகின்றது ஏனெனில், சீனா இராணுவ மற்றும் தொழில்நுட்ப விடயத்தில் அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கும் ஒரேயொரு சக்தி. இந்த நிலையில் அதனை எதிர்கொள்ளும் உபாயங்கள் தொடர்பில் அமெரிக்க ஆளும் தரப்பு சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது.

உலக அரசியலில் ஏற்படும் சடுதியான மாற்றங்களுக்குள் ஈழத் தமிழர் பிரச்னையெல்லாம் ஒரு விடயமாகவே இருக்கப் போவதில்லை. இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் அதிகம் நாடு தழுவிய அணுகுமுறையே மேலோங்கியிருக்கின்றது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட உலக அரசியல் சூழல் தற்போது தலைகீழ் நிலையை அடைந்திருக்கின்றது.

மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னரைப் போன்று உலகம் அதிக கவனம் செலுத்தக்கூடிய நிலையில் இல்லை. ஏனெனில், காஸாவில் ஹமாஸ்'க்கு எதிரான இஸ்ரேலிய நடவடிக்கையின்போது, மேற்குலகின் அணுகுமுறை முற்றிலும் வேறாக இருக்கின்றது. அத்தோடு "இப்போது நீங்கள் இல்லாவிட்டால் - அவர்கள்", என்றவாறு தெரிவுகள் உருவாகிவிட்டன. சிறிய நாடுகள்மீது மனித உரிமைகள் சார்ந்து அதிக அழுத்தங்களை பிரயோகித்தால் அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்ந்துவிடும் நிலைமை ஏற்பட்டுவிடலாம். இது மேற்குலகுக்கு ஒரு சவாலாக மாறிவிட்டது. இந்தப் பின்புலத்தில்தான், ஈழத் தமிழர் விவகாரம் கவனிப்பாரற்ற விவகாரமாக சுருங்கிவிட்டது.

இந்த அரசியல் சூழலை கருத்தில் கொண்டுதான் தமிழர் தரப்புகள் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது தொடர்ந்தும் ஒரு சில சுலோகங்களில் சுகம் காண முற்பட்டால் வழமைபோல் பேச்சு பல்லக்கு தம்பி பொடிநடை என்பது போலவே ஈழத் தமிழர் அரசியல் முற்றுப்பெறும்.

## வவுனியாவில் பாடசாலை மாணவன்மீது கண்ணாடித் துண்டுகளால் தாக்குதல்

*வவுனியா, பெப்.12*

வவுனியா வைரவப் புளியங்குளத்தில் போதைப் பொருளுக்கு அடிமையான சில இளைஞர்கள், உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் மீது கண்ணாடித் துண்டுகளால் வெட்டியதில் மாணவன் பலத்த காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வைரவப்புளியங்குளத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்றல் செயல்பாட்டை முடித்துவிட்டு வீதியால் வந்து கொண்டிருந்தபோது குறித்த மாணவன்மீது வைரவப்புளியங்குளத்தில் வழமையாக கூடி நிற்கும் போதைக்கு அடிமையான இளைஞர்கள் குழு கண்ணாடித் துண்டுகளால் வெட்டியுள்ளனர்.

இந்த நிலையில் காயமடைந்த குறித்த மாணவனை அங்கு நின்றவர்கள் சிகிச்சை அளிப்பதற்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

தாக்குதல் நடத்திய போதை ஆசாமிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(எ-10)

## இலவச கலை வகுப்புகள்

*யாழ்ப்பாணம், பெப். 12*

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறீல சிறீ ஆறுமுகநாவலர் கற்கைகள் நிறுவனத்தால் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இலவச கலை வகுப்புகள் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன.

பேச்சுதிறன், பட்டிமன்றம், பண்ணிசை, சங்கீதம் (வாய்ப்பாட்டு) , பரத நாட்டியம், மிருதங்கம், வயலின், யோகாசனம், சிலம்பம் ஆகிய கலைவகுப்புகளில் பங்கேற்று பயனடையுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கில் தென்னை ஆராய்ச்சி சபையின் ஓர் அலகை நிறுவ வேண்டியது அவசியம்

*யாழ்ப்பாணம், பெப்.12*

தென்னை ஆராய்ச்சி சபையின் ஓர் அலகை வடக்கு மாகாணத்தில் நிறுவ வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்துக்கு வருகை தந்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சுனிமல், தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொது முகாமையாளர் விஜயசிங்க ஆகியோர் தலைமையிலான குழுவினர் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர், "தென்னை பயிர்ச் செய்கை பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. தற்போது வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்"- என்றார். இதேவேளை, இந்த ஆண்டு ஒரு மில்லியன் தென்னங் கன்றுகளை நடுகை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இதற்குரிய ஒத்துழைப்புக்களை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

புதிய தென்னங்கன்றுகளை நடுகை செய்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், சில இடங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தால் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் சிக்கல் நிலைமை இருக்கின்றது எனவும் தெளிவுபடுத்தினார்.


வடக்கு மாகாணத்தில் தென்னை பயிர்ச் செய்கைக்கு உரங்கள் பயன்படுத்துவது குறைவு எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், இங்கு தென்னை ஆராய்ச்சி சபையின் ஓர் அலகினை நிறுவ வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக் காட்டினார். அதேபோன்று கலப்பு இன தென்னங்கன்றுகளை இங்கு அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அனுமதிக்கப்பட்ட சில வகையான உரங்களைப் பயன்படுத்துவதன் ஊடாகவே தென்னை மரங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுவதுடன் கூடியளவான உற்பத்தியையும் பெற்றுக் கொள்ள முடியும் என தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் தெரிவித்தார். அத்துடன் உரங்களை மானிய விலையில் வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவி பொது முகாமையாளர் தே.வைகுந்தன், வெள்ளை ஈ தாக்கத்தை பொறிமுறை ரீதியாக கட்டுப்படுத்துவதற்கான உபகரணங்கள் தென்னை பயிர்ச் செய்கை வசம் உள்ள போதும், ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாகத் தெரிவித்தார். பாதுகாப்புத் தரப்பினரின் உதவிகளைப் பெற்று வழங்கினால் பரவலாக இதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக ஆளுநர் தெரிவித்தார்.

(எ- 05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 12 செவ்வாய்கிழமை
குரோதி வருடம் - தை 30
நல்ல நேரம்:7.30 -9.00
ராகு காலம்:12.00 -1.30
திதி :பவுர்ணமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். அரசால் ஆதாயம் உண்டு. வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவரு வீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆத ரிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னை புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**சிம்மம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடி யாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும். விசேஷங் களை முன்னின்று நடத்துவீர்கள்.

**துலாம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறை வேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப் பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள் . பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும் மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழி யையோசிப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மரியாதை கூடும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடி யாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும்.

**மகரம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்று கொள்வார்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமு கமாக முடியும். நல்ல செய்தி உண்டு.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலி ருந்து நல்ல செய்தி வரும். வாகன வசதிப் பெரு கும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்று மதத்தவர் உதவுவார். கனவு நனவாகும் நாள்.

# வடக்கில் புதிய தென்னை வலயத்தை உருவாக்க முழுமையான ஒத்துழைப்பு

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

வடக்கில் புதிதாக தென்னை பயிர்ச் செய்கை வலயத்தை உருவாக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தில் வேகமாகப் பரவிவரும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவரிடம் வலியுறுத்தினார்.



வடமாகாணத்துக்கு வருகை தந்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சுனிமல், தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொது முகாமையாளர் விஜயசிங்க ஆகியோர் தலைமையிலான குழுவினர் ஆளுநரை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

பொருத்தமான தருணத்தில் தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவரது வருகை அமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், வடக்கில் மிக மோசமான பாதிப்பை வெள்ளை ஈ ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார். கடந்த ஆண்டு வெள்ளை ஈ தாக்கம் மோசமாக இருந்ததாகவும் பின்னர் அது இல்லாமல் போயிருந்ததாகவும் தற்போது மீண்டும் வேகமாகப் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், இதனை வேகமாகக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (எ-05)

# வவுனியாவில் குளவி கொட்டியதில் 9 பேர் மருத்துவமனையில் அனுமதி

வவுனியா, பெப்.12

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் குளவி கொட்டியதில் 9 பேர் பாதிக்கப்பட்டு வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீதியில் பலர் பயணித்துக் கொண்டிருந்த போது கூட்டமாக பறந்து வந்த குளவிகள் அவர்கள் மீது குத்தின.

இதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 9 பேர் குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பாடசாலைகளின் நிலைமை குறித்து ஆளும்தரப்பு எம்.பிக்கள் ஆராய்வு

வவுனியா, பெப்.12

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் நிலைமை தொடர்பில் பிரதி அமைச்சர் மற்றும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நேரில் சென்று அவதானம் செலுத்தினர்.

வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட தர்மபால வித்தியாலயம், சிறி சுமண மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க.வும், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், அல் இக்பால் மகா வித்தியாலயம், பாவற்குளம் மகா வித்தியாலயம், அல் அமீன் மகா வித்தியாலயம், வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரனும் சென்றனர். இவர்களுடன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த. முகுந்தனும் சென்றிருந்தார்.

இதன்போது, பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி பாடசாலைகளின் தேவைப்பாடுகள்,

பௌதீக மற்றும் ஆளணி வளம் தொடர்பிலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள்,

ஆசிரியர்கள் எதிர்நோக் கும் பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், பாடசாலை வளாகம் அதன் சூழல், மலசலகூட வசதி மற்றும் குடிநீர் வசதி என்பன தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

பாடசாலைகளை பார்வையிட்ட பின்னர், புதிய வரவு - செலவுத் திட்டம் மற்றும் விசேட ஒதுக்கீடுகள் மூலம் குறித்த பாடசாலைகளில் இனங்காணப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவித்தார். (எ-10)

# உரும்பிராயில் மோட்டார் சைக்கிள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உரும்பிராய் பகுதியில் வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை வன்முறைக் குழு ஒன்று தீயிட்டு எரித்துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த 9 ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமான நிலையில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-05)

# சித்தானைக்குட்டி சுவாமிகள் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், பெப்.12

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவசிறீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாகச் சிறப்புச் சொற்பொழிவும், சித்தானைக்குட்டி சுவாமிகள் குருபூஜை விழாவும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

காலை 09. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், ஆன்மீக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சித்தானைக்குட்டி சுவாமிகள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும்,

“ஈழத்து சித்தர்களில் சித்தானைக்குட்டி சுவாமிகள்” என்னும் தலைப்பில் சைவப்புலவர் செ. த. குமரன் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பை தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம்!

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 12

**புதிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பது இலகுவானதொரு விடயமல்ல. இருப்பினும் ஏற்கெனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்குரிய காலவரையறையொன்றை நிர்ணயித்து உரிய நகர்வுகளை ஆரம்பிக்க வேண்டும். யாப்புருவாக்க செயன்முறையை அநாவசியமாக தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-இலங்கையை புதுயுகத்தை நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு அரசியலமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வது மிக அவசியமென நாம் உறுதியாக நம்புவதுடன், இது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

அதன்படி இம்முறை சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியவாறு, தேசிய மற்றும் மத ஒருமைப்பாட்டை முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியது அவசியம் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

அதேபோன்று அரசியலைப்பு மறுசீரமைப்பு செயன்முறையானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக கோட்பாடுகளுக்கமைவாகவும், இந்நாட்டின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக்கூடியதுமான விதத்தில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

நாட்டுக்கு பொருந்தும் வகையிலான புதிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பது அத்தனை இலகுவானதொரு விடயமல்ல என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குறுதியளிக்கப்பட்டவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்குரிய காலவரையறையொன்றை நிர்ணயித்து உரிய நகர்வுகளை ஆரம்பிக்க வேண்டும். மாறாக புதிய அரசியலமைப்பு உருவாக்க செயன்முறையை அநாவசியமாக தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்-என்றுள்ளது.

(அ)

# யோஷிதவின் பாட்டிக்கு வெளிநாட்டு பயணத்தடை

கொழும்பு, பெப். 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் மகன் யோஷித்த ராஜபக்ஷவின் பாட்டி டெய்வி பொரெஸ்ட் விக்கிரமசிங்கவுக்கு கடுவலை நீதவான் நீதிமன்றம் வெளிநாட்டு பயணத்தடையை விதித்துள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

டெய்சிபொரெஸ்ட் விக்கிரமசிங்கவுக்கு சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பில் சந்தேக நபர் என குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. சட்டமாஅதிபரின் உத்தரவின் பேரிலேயே இந்த குற்றசாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

யோஷித ராஜபக்ஷ, டெய்சி பெரெஸ்ட் இருவருடைய பெயரிலும் வங்கியில் காணப்பட்ட 59 மில்லியன் ரூபாய் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர், இந்த பணம் குறித்த விவரங்களை யோஷித ராஜபக்ஷ வெளியிடதவறிவிட்டார் என தெரிவித்துள்ளார். (அ)

# கடற்படையினரின் விடுதியில் வெடித்தது எரிவாயு சிலிண்டர்!

கொழும்பு, பெப். 12

கதிர்காமம் கடற்படை விடுதியில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் அங்கு தங்கியிருந்த இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 32 வயதுடைய பெண் ஒருவரும் 36 வயதுடைய ஆண் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

காலை நேர உணவு தயாரிப்பதற்காக சென்றபோது எரிவாயு சிலிண்டர் வெடித்து சிதறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

# கர்ப்பவதி பெண்கள், குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பெரும் சவால்கள்!

கொழும்பு, பெப். 12

இலங்கையில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் சவால்கள் எழுந்துள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு 3 இலட்சத்து 41 ஆயிரத்து 745 கர்ப்பவதி பெண்கள் பதிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் 3 இலட்சத்து 19 ஆயிரத்து 10 குழந்தைகள் பிறந்துள்ளன. எனினும், புதிதாகப் பிறந்த குழந்தைகளில் அனைத்தும் ஆரோக்கியமற்றவர்கள் என்று இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரி தெரிவித்துள்ளது.

பிரதானமாக, 1,600 குழந்தைகள் 28 வாரங்களுக்கு முன்னர் கருப்பையிலேயே இறந்துள்ளன. பிறந்த குழந்தைகளில் 35 வீதம் பேர் பிறவி குறைபாடுகளுக்குக் உள்ளாகியிருந்தனர். மேலும், ஒவ்வொரு ஆண்டும் 4,000 முதல் 5,000 குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன் பிறந்துள்ளன என்றும், 900 முதல் 1,000 குழந்தைகள் பிறந்த பிறகு ஒரு வயதுக்குள் இறந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக மருத்துவர் கபில ஜயரத்ன கூறியபடி, இந்த குறைபாடுகளுக்கு முக்கிய காரணமாக மரபணு பிரச்னைகள், சுற்றுச்சூழல் காரணிகள், இரசாயனங்கள் மற்றும் கதிர்வீச்சு போன்றவை காரணங்களாக உள்ளன.

இலங்கையில் பிறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, 2019இல் 3 இலட்சத்து 19 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் இருந்த குழந்தைகள் பிறப்பானது, 2023இல் 2 இலட்சத்து 47 ஆயிரத்து 900ஆக குறைந்துள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தைகளில் பெரும்பாலானவர்கள் இயல்பாக வாழ்ந்தாலும், சிலர் பிறந்தவுடன் 24 மணி நேரத்திலேயே இறந்து போகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023இல் 453 குழந்தைகள் பிறந்தவுடன் இறந்துவிட்டன, மேலும் பிறந்த பிறகு 2 முதல் 7 நாட்களுக்குள் 951 குழந்தைகள் இறந்துவிட்டன. 8 முதல் 28 நாட்கள் கழித்து 527 குழந்தைகள் உயிரிழந்தன.

இந்த நிலைமை, நாட்டின் குழந்தைகள் மற்றும் கர்ப்பவதி பெண்களின் ஆரோக்கியத்தில் மேலும் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை காட்டுவதாய் அமைந்துள்ளது. (அ)

# இந்திய தூதர் சந்தோஷ் ஜாவுடன் இ.தொ.கா பிரதிநிதிகள் சந்திப்பு!

கொழும்பு, பெப். 12


இலங்கைகக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் .

கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

குறிப்பாக இச்சந்திப்பின் போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது.

அதாவது மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பிலும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கான காணி உரித்தினை பெற்றுக்கொ டுப்பது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

மேலும் இந்திய அரசாங்கத்தின் உதவின் கீழ் மலையக பெருந்தோட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்தினை(வித்தியாவர்தன) வழங்கி எமது ஆசிரியர்களுக்கான அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய துறைகளில் புலமையை அதிகரித்துக் கொள்வதற்காக உதவி வழங்கியைமைக்காக இந்திய அரசாங்கத்திற்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.



அதேபோல் பெருந்தோட்ட பகுதிகளின் அபிவிருத்தி திட்டங்களுக்காக, ஜீவன் தொண்டமான், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இந்திய அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டதற்கினங்க இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 3 பில்லியன் ரூபாய் நிதி உதவியிற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை தற்போதைய அரசாங்கத்தினூடாக மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இலங்கைக்கான இந்திய தூதுவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. (அ)

# லிட்ரோவின் விலைத் திருத்தம் அரசின் நிலைப்பாடு விரைவில்!

கொழும்பு, பெப். 12

லிட்ரோ நிறுவனம் முன்வைத்த எரிவாயு விலை திருத்தம் தொடர்பிலான கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் என நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையின் விலைகளுக்கு ஏற்ப நாட்டின் எரிவாயு விலையினை திருத்துவதற்கான கோரிக்கையை லிட்ரோ நிறுவனம் முன்வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையிலே யே, லிட்ரோ நிறுவனம் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டினை அரசாங்கம் அறிவிக்கும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதனிடையே, லிட்ரோ எரிவாயு விலை திருத்தத்திற்கு ஏற்ப புதிய விலைகள் விரைவில் அறிவிக்கப்படும் என லாஃப் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# 3 நாட்களில் இயல்பு நிலைக்கு திரும்பும் நுரைச்சோலை அனல் மின் நிலையம்!

கொழும்பு, பெப். 12

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் அடுத்த வெள்ளிக்கிழமை மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதை மீண்டும் இணைப்பதற்குத் தேவையான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

அதன்படி, நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரை தொடர்பில் அரசு தீர்மானம் எடுக்கவில்லை

## அமைச்சர் ஹினிதும சுனில் செனவி

கொழும்பு, பெப். 12

**யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைந்துள்ள பௌத்த விகாரை தொடர்பாக அரசாங்கத்தில் எவ்விதமான பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை என புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.**



தனியாருக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் விகாரையை அகற்ற வலியுறுத்திப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

நேற்று முதல் அங்கு போராட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

விகாரையை அகற்ற முடியாது எனவும், மாறாக விகாரைக் காணியின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனவும் புத்த சாசன அமைச்சர் கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாக அமைச்சரைத் தொடர்புகொண்டு கேட்ட போது,

அதனை நிரா கரித்த அவர், அண்மையில் யாழ்ப்பாணம் சென்றபோது தம்மிடம் இந்த விடயத்தைப் பற்றிக் கூறியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

இதுவொரு பாரதூரமான விடயம் என்பதால், சகல தரப்பினரையும் இணைத்துக் கலந்துரையாட வேண்டும் என தீர்மானித்திருந்த போதிலும் அரசாங்க மட்டத்தில் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப் படவில்லை என அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார். (அ)

# டுபாயின் பிரபல தொழிலதிபரை சந்தித்த ஜனாதிபதி அநுரகுமார!



கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் மாஸ்டர் இன்வெஸ்ட்மென்ட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ராஸ் அல் கைமா ஆட்சியாளரின் மருமகனுமான ஷேக் அப்துல்லா பின் முஹம் மது அல் காசிமிக்கும் இடையில் ஜுமேரா பீச் ஹோட்டலில் சந்திப்பொன்று நடைபெற் றுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத் திற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று முன் தினம் பிற்பகல் ஷேக் அப்துல்லா பின் முஹம் மது அல் காசிமியை சந்தித்துக் கலந்துரையாடினார். (அ)

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூடு விசாரணை செய்ய நான்கு குழுக்கள்!

கொழும்பு, பெப். 12

கொட்டாஞ்சேனை சென். பெனடிக்ற் பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடத்தப் பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 4 பொலிஸ் குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர், கொட்டாஞ்சேனை - பெனடிக்ற் மாவத்தை பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவத்தில் படுகாயம டைந்தவர்,

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதன் பின்னர் உயிரிழந் தார்.

உயிரிழந்தவர் ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித் தனர். (அ)

# நுரைச்சோலை பழுதுபார்க்கப்படாவிடின் தீவு முழுவதும் அடிக்கடி மின்சாரத் தடை!

கொழும்பு, பெப். 12

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையம் பழுதுபார்க்கப்பட்டு, தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் வரை, குறைந் தபட்சம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தீவின் பல மாவட்டங்களில் மின்வெட்டு விதிக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொதுவாக, நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் பழுது பார்ப்பு வேகம் முன்னேறும் போது, சில பகுதிகளில் மின் வெட்டு நேரம் குறையலாம்.

ஆனால், இந்த வேலைகள் முடிவடைய, மின் கட்டமைப் புடன் இணைக்க குறைந்தது ஐந்து நாட்கள் ஆகும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட மின் தடை குறித்து விசாரணைகள் நடந்து வருவதாகவும், விரைவில் அறிக்கை வெளியிடப்படும் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கூறியுள்ளது.

தற்போது தீவின் மின்விநியோகக் கட்டமைப்புக்கு அவசர புதுப்பிப்பு தேவை என்பதைக் கூறும் பொறியாளர்கள், குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளுக்கான அவசரக் கூட்டங்களை அரசாங்கம் மற்றும் மின்சார சபையுடன் நடத்தவேண்டும் என கூறியுள்ளனர்.

நீர் மின் நிலையங்கள் மற்றும் வலுவான மின் இணைப்புகளுடன் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், தீவு முழுவதும் மின் தடை அடிக்கடி நிகழும் என்ற எச்சரிக்கையை நிபுணர்கள் விடுத்துள்ளனர். (அ)

# திருடருடன் கூட்டணி அமைக்க வேண்டுமா?

கொழும்பு, பெப். 12

திருடர்களுடன் எந்தவித தொடர்பும் இல்லை எனக் கூறிக்கொள்ளும் நாமே திருடர்களுடன் கூட்டணி அமைக்க வேண்டுமா எனக் கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது எமது எதிர்கால அரசியல் பயணத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்காலத்தில் சுயாதீனமாகவும் கௌரவமாகவும் அரசியல் பயணத்தை முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது-அரகலயவின் போது தமது சொத்துக்கள் சேதமாக் கப்பட்டதாகத் தெரிவித்து நட்டஈடு பெற்றுக் கொண் டவர்களின் பெயர் பட்டியல் ஒன்று அண்மையில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவினால் வெளியிடப்பட்டது.அந்த நிதியினை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வழங்கியுள்ளார்.நாம் திருடர்களுடன் கூட்டுச் சேரமாட் டோம் எனக் கூறியிருந்தோம். இவ்வாறான பின்னணியில் இந்த திருடர்களுடன் இணைய வேண்டுமா? ரணிலுடனோ அல்லது அவரது கட்சியில் உள்ளவர்களுடன் இணைந்து எமது அரசியல் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமா?

இரு கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து கதைத்துக் கொள் கிறார்கள். அது தொடர்பில் விமர்சிக்க நாம் விரும்ப வில்லை. ஆனால் நாம் கட்சியின் உறுப்பினர்கள்.மக்கள் எம்மிடத்தில் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் அல்லவா?எனவே இந்த கட்சிகள் இணையுமாயின் புதிய கூட்டணியின் தலைமை பதவி சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட வேண்டும்.

அதே போன்று நாம் தொலைபேசி சின்னத்திலேயே களமிறங்க வேண்டும்.ஆனால் அதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள்.

நாம் அவர்களின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண் டுமா? ஐக்கிய மக்கள் சக்தி நாட்டின் பிரதான எதிர்க்கட்சி 40 மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண் டுள்ள கட்சி.எனவே நாம் அடி பணிந்து செல்ல வேண்டுமா? சுயாதீனமாகவும் கௌரவமா கவும் நாம் எமது பயணத்தை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலத்தை வழங்கிய மக்கள் தற்போது அதிருப்தி அடைந்துள்ளனர். நாட்டில் அரிசி தட்டுப்பாடு. நெல்லுக்கு போதுமான நிர்ணய விலை வழங்கப்பட வில்லை. உப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. ஞாயிற்றுக் கிழமை காலை குரங்குகளின் சேட்டையாலேயே நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கூறியிருந்தார்.

பின்னர் அவர் கடந்த காலங்களில் மின் கட்டமைப்பு முறைமை முறையாக பராமரிக் கப்படவில்லை என்பதாலேயே மின் தடை ஏற்பட்டதாக மாலை ஊடகங்களுக்கு அறி விக்கிறார்.அவர் ஒரு பொறியியலாளர்.

ஆனால் பாதுகாப்பு அதிகாரி குரங்குகளால் சேதம் ஏற்படவில்லை எனக் கூறு கிறார்.

அமைச்சர் ஒருவர் இவ்வாறு பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்ள முடியுமா ?எனவே இந்த நாட்டை மேம்படுத்தவே மக் கள் அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள்.

இன்னும் எதிர்க்கட்சிகளை குறைக்கூறி க்கொண்டிருக் காமல் வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்றுங் கள்-என்றார். (அ)

# நெல் களஞ்சியசாலைகள் இன்னும் திறக்கவில்லை!

## விவசாயிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 12

அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை கடந்த வாரம் அறிவித்திருந்த போதும் நெல் களஞ்சியசாலைகள் இதுவரை திறக்கப்படவில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட் டியுள்ளனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலையாக, நாட்டு நெல் கிலோ ஒன்று 120 ரூபாய்க்கும், சம்பா நெல் கிலோ ஒன்று 125 ரூபாய்க்கும், கீரிச் சம்பா நெல் கிலோ ஒன்று 132 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படும் என அரசாங்கத்தால் அறிவிக்கப் பட்டிருந்தது.

அதன்படி, அரசாங்கம் நிர்ணயித்த உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக கடந்த வியாழக் கிழமை முதல் களஞ்சியசாலைகள் திறக்கப்படும் என நெல் சந்தைப்படுத்தல் சபை அறிவித் திருந்தது.

எனினும், பல மாவட்டங் களில் நெல் களஞ்சியசாலைகள் சுத்தம் செய்யப்பட்டபோதும், நிதி பற்றாக்குறையின் காரண மாக இதுவரை நெல் கொள்வனவு இடம்பெறவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

அதேநேரம், கடந்த வருடம் நவம்பர் 26 ஆம் திகதி முதல் ஏற்பட்ட வெள்ளப்பெருக் கினால் சேதமடைந்த பயிர் களை ஆய்வு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை அறிவித் துள்ளது.

அதன்படி, சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு வழங்க ஆரம்பிக்கப்பட்டுள் ளதுடன், அம்பாறை மாவட் டத்தில் 7,657 ஏக்கர் நிலத்திற் கான 8,705 விவசாயிகளின் கணக்குகளில் 122 மில்லியன் ரூபாய் பணம் வரவு வைக்கப்ப டும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

பொலனறுவை மாவட் டத்தில் 6,239 விவசாயிகளுக்கு 9,067 ஏக்கருக்கு 114 மில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ள தாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், வவுனியா,

அதன்படி, சேதம டைந்த 4,324 ஏக்கர் பயிர்க ளுக்கு 3,272 விவசாயிக ளின் கணக்குகளில் 70 மில்லி யன் ரூபாய் வரவு வைக்கப்பட் டுள்ளதாகவும் காப்புறுதிச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டுக்கு முதலில் குரங்கு மீது பழி! பின்பு கடந்த அரசுகள் மீது குற்றச்சாட்டு!!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 12

**மின்வெட்டுக்கு முதலில் ஒரு குரங்கு மீது பழி சுமத்திய அரசாங்கம், பின்னர் அதனை கடந்த அரசாங்கங்கள் மீது சுமத்தியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் கணக்கில் பதிவொன்றை இட்டு இதனை தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் உண்மையான பிரச்னை என்ன என்பதை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியதும்,



குறைந்த தேவை காலங்களை நிர்வகிக்காத பலவீனமான நிர்வாகமும் மின் தடைக்கு முக்கிய காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# இறக்குமதி உப்பு 100 கிராமுக்கு 4 ரூபாய் வரி!

கொழும்பு, பெப். 12

இறக்குமதி செய்யப்படும் உப்பு தொன் ஒன்றுக்கு இறக்குமதி வரியாக 40,000 ரூபாய் விதிக்கப்படுவதாக சுங்கத் திணைக்களத்தின் தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபாய் வரி விதிக்கப்படுவதோடு இறக்குமதி செய்யப்படும் 100 கிராம் உப்புக்கு 4 ரூபாய் வரி விதிக்கப்படும்.

சந்தையில் 400 கிராம் உப்பு பைக்கெற் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் அதற்காக 16 ரூபாய் வரி உள்ளடக்கப்படுகிறது.

இதேவேளை, 400 கிராம் உப்புத் தூள் பைக்கெற் ஒன்று 100 - 120 ரூபாய் வரையிலும் உப்புத் துகள் பைக்கெற் ஒன்று 120 - 180 ரூபாய் வரையிலும் விலை அதிகரிக்கப்பட்டது.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இவ்வாறு உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

அதன்படி, இந்தியாவில் இருந்து 12,000 மெற்றிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் இவ்வாறு உப்பை இறக்குமதி செய்வது தற்காலிகமான ஒரு தீர்வு எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டுக்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 12

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 3,32,439 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் பெப்ரவரி மாதத்தின் முதல் 9 நாட்களில் மொத்தம் 79,678 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் எனவும் பெப்ரவரி மாதத்தின் முதல் 9 நாட்களில் இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சலுகை விலையில் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருள் வழங்கல்!

கொழும்பு, பெப். 12

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கொள்கை தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சலுகை விலையில் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக கூட்டுறவு மற்றும் சதோச வலையமைப்பை விரிவுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களை மூடராக்கும் மின்சக்தி அமைச்சர்!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 12


அரசாங்கம் பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த உயிரினங்களையும் குற்றவாளியாக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. குரங்கினால் தான் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது என்று மக்களை மூடர்களாக்கும் வகையில் பேசுவதை மின்சக்தி அமைச்சர் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கத்துக்கும் உயிரினங்களுக்கும் ஏதும் முற்பகை உள்ளதா என்று தெரியவில்லை.

வீட்டில் வளர்க்கும் பிரயாணிகளுக்கு உணவளிப்பதால் தான் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். காட்டு விலங்குகளால் தான் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்.

வீடுகளில் தேங்காய் சம்பல் மற்றும் உணவுக்கு தேங்காய் பால் எடுப்பதால் சந்தையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு



ஏற்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

தமது இயலாமையை மறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் போலியான காரணிகளை மாத்திரமே குறிப்பிட்டுக் கொள்கிறது.

இந்த அரசாங்கம் பதவி காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் உயிரினங்களை குற்றவாளியாக்கும் என்றே எண்ணத்தோன்றுகிறது.

மின்பிறப்பாக்கியில் குரங்கு மோதியதால் மின்விநியோகம் தடைபட்டது என்று மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது மின்விநியோக கட்டமைப்பில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின்விநியோகத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மின்சாரத்துறை சபை குறிப்பிட்டுள்ளது.

ஆகவே மக்களை மூடர்களாக்கும் வகையில் கருத்துரைப்பதை அமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# எம்.பிக்களுக்கு 122 கோடி ரூபா இழப்பீடு குற்றப்புலனாய்வுப்பிரிவில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 12

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வன்முறையின் போது தமது வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்து 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 122 கோடி ரூபா இழப்பீடு பெற்றுக்கொண்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம் ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தி அமைப்பின் தலைவர் ஜனாமுனி காமந்த துஷாரவினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

நாட்டு பிரஜை ஒருவரின் சொத்து தீயிட்டு எரிக்கப்படுமாயின் அதனைச் செய்தவர்களை தேடிப்பார்த்து அதன் பின்னர் நீதிமன்றத்துக்குச் சென்று தான் நட்டஈட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று அந்த சொத்துகளுக்கு காப்புறுதி அளிக்கப்பட்டிருந்தால் அதன் மதிப்பு அளவீடு செய்தன் பின்னரே காப்புறுதி நிறுவனம் அதனை வழங்கும்.

ஆனால் இந்த பாராளுமன்ற உறுப் பினர்கள் பொதுமக்களுக்கு கிடைக்காத சலுகைகளை பயன்படுத்தி நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அறவழிப் போராட்டத்தின்போது அழிக்கப்பட்ட பொதுமக்கள் சொத்துக்கள், வீடுகள், பஸ்கள் எரிக்கப்பட்ட போது எந்தவித நட்டஈடும் வழங்கப்படவில்லை.எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து வீடுகள் தீக்கிரையாகின.அவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.தாங்களே அமைச்சரவையில் இருந்து தங்களுக்கு இடையிலேயே அதனை பகிர்ந்துகொள்வது நியாயமான விடயமா? இயற்கை அனர்த்தங்களால் வீடுகள் அழிவடைந்தன.ஆனால் நட்டயீடு வழங்கப்படவில்லை.

எனவே இது தொடர்பில் நாம் குற்றப்புலானய்வுத் திணைக்களத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளோம். மக்களின் பிரச்னைகளை சமூகமயப்படுத்த வேண்டும் என இந்த அரசாங்கத்திடம் கூறிக் கொள்கிறோம்.

நாம் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்வோம். ஆனால் அதனை மேற்கொள்வதற்கான சட்டங்கள் நாட்டில் இல்லையென்றால் சட்டங்களை உருவாக்குங்கள்-என்றார். (அ)

# நாணய நிதியத்தின் பணிப்பாளருடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்திப்பு!

கொழும்பு, பெப். 12

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி கிருஸ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. பிரதமர் அலுவலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, வரி கொள்கை, வரி வருவாயைத் திறம்பட நிர்வகிப்பது மற்றும் அரசுத்துறையின் செயல்திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, பிரதான பொருளாதார விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# துப்பாக்கியுடன் காணாமல்போன கான்ஸ்டபிளின் பெற்றோர் கைது!

கொழும்பு, பெப். 12

கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கி காணாமல் போன சம்பவம் தொடர்பில் அவரது தாயும் தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றத்திடம் அனுமதி பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதற்கிடையில், சந்தேக நபருக்கு உதவியதாகக் கூறப்படும் மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிளும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை, கல்கிஸை பொலிஸை சேர்ந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் தனது துப்பாக்கியுடன் காணாமல் போன சம்பவம் பதிவாகியிருந்தது.

முதற்கட்ட விசாரணையில், குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் டுபாய்க்கு சென்றுவிட்டதாக தெரியவந்துள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் காணாமல்போனது குறித்து விசாரணை நடத்தி வரும் கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவு, குறித்த கான்ஸ்டபிளின் பெற்றோரை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டதாக தெரிவிக்கப்படு கிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தைப்பூசத்தை முன்னிட்டு பாரம்பரிய அறுவடை விழா



திருகோணமலை, பெப்.12

தைப்பூசத்தை முன்னிட்டு பாரம்பரிய முறையிலான புதிர் அறுவடை விழா மூதூர் - மணற்சேனை பகுதியில் நேற்று காலை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இதனை, மூதூர் மணற்சேனை சிறீ சித்தி விநாயகர் ஆலய நிர்வாகமும், கிராம மக்களும் இணைந்து ஏற்பாடு செய்தனர்.

இதன்போது மாட்டு வண்டில்கள் பவனியாக நெற்கதிர் அறுவடை நடைபெறும் இடத்துக்குச் சென்றதுடன், அவ்விடத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்பின்னர் நெல் அறுவடை நடைபெற்றதோடு அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை தலையில் சுமந்து மாட்டு வண்டில்களில் ஏறி மீண்டும் கோவிலுக்கு கொண்டு வந்தனர்.

பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன.இப் புதிர் அறுவடை விழாவில் அதிகளவான பொது மககள் கலந்து கொண்டனர். (எ)

# பெரிய நீலாவணையில் மதுபானசாலை திறப்பு!

## பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




கல்முனை, பெப்.12

**இரண்டு தடவைகள் பொதுமக்கள் நடத்திய எதிர்ப்பு போராட்டங்களையும் பொருட்படுத்தாது பெரிய நீலாவணையில் மதுபான சாலை நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொது மக்கள் மூன்றாவது முறையாகவும் ஆர்ப்பாட்டத்தை கொட்டும் மழையில் முன்னெடுத்துள்ளனர்.**

பெரியநீலாவணையில் ஏற்கனவே ஒரு மதுபானசாலை இயங்கி வருகிறது.

அதேவேளை கடந்த வருடம் புதிய மதுபானசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அதனை பொதுமக்களும், பொது அமைப்புகளும் ஆலய பரிபாலன சபையினரும், பல்வேறு பட்ட எதிர்ப்புகளை தெரிவித்து கல்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளித்ததன் மூலம் தற்காலிகமாக அது மூடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மீண்டும் இந்த வருடம் மதுபானசாலையை திறப்பதற்குரிய நடவடிக்கையை உரிமையாளர் மேற்கொண்ட போதும், மீண்டும் பொதுமக்கள்

கல்முனை வடக்கு பிரதேச செயலத்துக்கு முன்பாக ஒன்று கூடி விளக்குமாற்றுடன் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொண்டிருந்தனர். அத்தோடு, மதுவரி திணைக்கள அதிகாரிகளிடம் பொது அமைப்புகளும் ஆலய பரிபாலன சபையினரும் பெரியநீலாவணையில் ஏற்கனவே மதுபானசாலை ஒன்று இருப்பதாகவும் மற்றுமொரு மதுபான சாலை அவசியம் இல்லை என்பதையும், கூறி தமது கிராமத்து மக்களுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை தெரிவித்து மகஜர் ஒன்றை கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஊடாக கையளித்திருந்தனர்.

இதன் பின்னர் மதுவரி திணைக்கள அதிகாரிகள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு வருகை தந்து மகஜர் கையளித்த பொது அமைப்புகளையும் ஆலய பரிபாலன சபையினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இவ்வாறு பொதுமக்கள் எதிர்ப்புகள் தெரிவித்த போதும் நேற்றுக் காலை மது பானசாலை மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதனை எதி ்ந்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# கூட்டுறவு சங்க நுகர்வோர் விற்பனை நிலையம் திறப்பு



அக்கரைப்பற்று, பெப்.12


அம்பாறை, ஆலையடி வேம்பு மகா சக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் கூட்டுறவு நுகர்வோர் விற்பனை நிலையம் நேற்று அக்கரைப்பற்று சாகம வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான பொ. தனேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் முன்னாள் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. வேல்வேந்தன், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். சி. ஜலால்டீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அங்கத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் முதன்முறையாக நுகர்ச்சிப் பிரிவை ஆரம்பித்திருப்பது விசேட அம்சமாகும். (எ)

# பெருந்தொகை கேரள கஞ்சாவை கட்டிலின் கீழ் பதுக்கியவர் கைது



கல்முனை, பெப்.12

50 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய கேரளக் கஞ்சாவை சூட்சுமமாக கட்டிலின் கீழ் பதுக்கி வைத்திருந்த நபர் ஒருவர் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றில் கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே 18 கிலோ 169 கிராம் கேரளக் கஞ்சா வீட்டில் உள்ள கட்டிலின் கீழ் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்டது.(எ)

# சோமநாத லிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்





மட்டக்களப்பு, பெப்.12

சித்தரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் என்ற பெருமையைக் கொண்ட மட்டக்களப்பு செட்டிப்பாளையம் சோமகலா நாயகி சமேத சோமநாத லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

கடந்த 05 ஆம் திகதி கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்த நிலையில் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயத்தின் பிரதம குரு சிவசிறீ சச்சிதானந்த குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் காலை விசேட பூஜைகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி பிரதான கும்பம் உட்பட கும்பங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு பிரதான தூபி மற்றும் பரிபாலன தெய்வங்களின் தூபிகள் அபிஷேகம் செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பிரதான கும்பம் கருவறைக்குள் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு அரோகரா கோஷம் முழங்க மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து தசமங்கல தரிசன நிகழ்வு நடைபெற்றது. இதில் பல வெளிநாட்டவர்களும் கலந்து கொண்டனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து பயங்கர விபத்து, 51 பேர் பலி!

## கவுதமலாவில் பெரும் துயரச் சம்பவம்



கவுதமலாசிற்றி, பெப்.12

**கவுதமலாவில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், 51 பேர் பலியாகினர். இந்த விபத்துச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான கவுதமலாவில் பாலத்தின் மீது சென்றுகொண்டிருந்த பஸ் வீதியோர தடுப்பின் மீது மோதி பள்ளத்தாக்கில் வீழ்ந்தது. இதில் 51 பேர் பலியானதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான பஸ் பாலத்தில் இருந்து கவிழ்ந்து கழிவுநீரால் மாசுபட்ட ஆற்றில் விழுந்துள்ளது. 70இற்கும் மேற்பட்டவர்களை ஏற்றிச் சென்ற இந்த பஸ் இடிபாடுகளில் இருந்து 51 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாக மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான இந்த பஸ் நேற்று முன்தினம் மாலை எல் ப்ரோக்ரெசோவில் உள்ள சான் அகஸ்டின் அகாசாகு வாஸ்ட்லான் நகரத்திலிருந்து கவுதமாலா சிற்றிக்கு வடகிழக்கில் சுமார் 90 கிலோமீற்றர் தொலைவில் சென்று கொண்டிருந்தபோதே விபத்துக்குள்ளானது.

அந்த நாட்டின் ஜனாதிபதி பெர்னார்டோ அரேவலோ இந்த துயரச் சம் பவத்துக்கு வருத்தம் தெரி வித்து, தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளார். "இன்று கவுதமாலாவுக்கு ஒரு கடினமான நாள்" என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். (எ)

# பணய கைதிகளை விடுவிக்க காலக்கெடு விதித்தார் ட்ரம்ப்

வாஷிங்டன், பெப்.12

காஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் பணயக் கைதிகள் அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மதியத்துக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும். அப்படி அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்து விடுவேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையேயான மோதல் போக்கானது பல வருடங்களாக நீடித்து வரும் சூழலில், பலஸ்தீனத்தின் காஸா பகுதியை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதல் நடத்தினர்.

இதில், இஸ்ரேல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணயக் கைதிகளாக சிறை பிடித்தும் சென்றனர். இதனைத் தொடர்ந்து காஸாவுக்கு எதிரான போரில் இஸ்ரேல் ஈடுபட்டது.

இந்தச் சூழலில், அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் மேற்கொண்ட மத்தியஸ்த பேச்சுகளின் பலனாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனடிப்படையில் இஸ்ரேல் கைதிகள் மற்றும் பலஸ்தீன கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காஸாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் அனைவரும் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மதியத்துக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும். அப்படி அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்து விடுவேன் என கூறினார்.

காஸாவிலிருந்து புலம் பெயர்ந்து வரும் அகதிகளை ஜோர்தான் மற்றும் எகிப்து நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். (எ)

# ஜெட் விமானங்கள் மோதி விபத்து அமெரிக்காவில் என்ன நடக்கிறது?

## 2 வாரங்களில் 80 பேர் உயிரிழப்பு



வாஷிங்டன், பெப்.12

அமெரிக்காவில் தனியார் ஜெட் விமானங்கள் மோதிய தில் ஒருவர் பலியானார். அங்கு கடந்த 2 வாரங்களில் 3 பெரும் விமான விபத்துகள் ஏற்பட்டு 80இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் ஸ்காட்ஸ்டேல் விமான நிலையத்தில் ஜெட் விமானங்கள் அடிக்கடி வந்து செல்லும். இந்த விமான நிலையத்தில் இருந்து சில மைல்கள் தொலைவில் அமைந்துள்ள, கோல்ப் மைதானத்தில் வார இறுதி நாட்களில் கோல்ப் போட்டி தொடர் நடைபெறும். இதனைக் காண்பதற்காக அதிகளவில் கூட்டம் வரும். இரசிகர்கள் பலரும் ஜெட் விமானங்களில் வந்து செல்வார்கள். இதனால், இந்தப் பகுதி பரபரப்பாக இருக்கும்.

இந்த நிலையில், 2 தனியார் ஜெட் விமானங்கள் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து, அம்புலன்ஸ்கள் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்றன. மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதுபற்றி மத்திய விமான போக்குவரத்து துறை நிர்வாகம் வெளியிட்ட செய்தியில், நடுத்தர அளவிலான ஜெட் விமானம் ஒன்று, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு ஜெட் விமானம் மீது மோதி விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். இதனைத் தொடர்ந்து, விமான நிலையம் மூடப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி, வர்த்தக ஜெட் விமானம் மற்றும் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் டி.சியில் மோதிக் கொண்டதில் 67 பேர் உயிரிழந்தனர்.

ஜனவரி 31ஆம் திகதி பிலடெல்பியாவில் மருந்து பொருட்களை ஏற்றி சென்ற விமானம் விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த 6 பேரும் உயிரிழந்தனர். கடந்த வாரம், மேற்கு அலாஸ்காவில் சிறிய ரக விமானம் ஒன்று நோமி பகுதியில் விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த 10 பேரும் பலியாகினர்.

கடந்த 2 வாரங்களில் இதுபோன்ற பெரும் விபத்துகளை அமெரிக்க விமான போக்குவரத்து துறை எதிர்கொண்டுள்ளது. (எ)

# "பலஸ்தீனர்கள் மீண்டும் குடியேற உரிமையில்லை"

## காஸாமீது கண்வைத்துள்ள அமெரிக்கா

வாஷிங்டன், பெப்.12

பலஸ்தீனர்கள் மீண்டும் காஸாவில் குடியேற உரிமையில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பலஸ்தீனர்கள் காஸா பகுதிக்குத் திரும்ப உரிமை உள்ளதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது" இதற்கு "அரபு நாடுகள், குறிப்பாக அமெரிக்க நட்பு நாடுகளான ஜோர்தான் மற்றும் எகிப்து, காஸாவில் உள்ள பலஸ்தீனர்களை அழைத்துச் செல்ல அழுத்தம் கொடுத்து வருவதால் இது நடந்து வருகிறது.

நாங்கள் பாதுகாப்பான சமூகங்களை உருவாக்குவோம். அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து சிறிது தொலைவில், இடைக்கால ஏற்பாடுகளுக்கு மட்டுமே பலஸ்தீனியர்களை காஸாவில் இருந்து இடம்பெயர அனுமதிப்போம். அவர்கள் மீண்டும் காஸாவில் குடியேற உரிமையில்லை"- என்றார்.(எ)

# மெக்சிக்கோ வளைகுடா அமெரிக்க வளைகுடாவானது

## பெயர் மாற்றி ட்ரம்ப் உத்தரவு

மெக்சிக்கோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடா எனப் பெயர் மாற்றி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி புளோரிடா மாகாணத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது, "விரைவில் ஒரு மாற்றத்தை அறிவிக்க உள்ளோம்.

மெக்சிக்கோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என மாற்றப்போகிறோம். ஏனென்றால் அது எங்களுடையது. அமெரிக்க வளைகுடா ஓர் அழகான பெயர். அது மிகச்சரியாக உள்ளது" என்று அறிவித்து ட்ரம்ப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த நிலையில், தற்போது




மெக்சிக்கோ வளைகுடாவை, அமெரிக்க வளைகுடா என பெயர் மாற்றம் செய்யும் உத்தரவில் ட்ரம்ப் கடந்த 9 ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளார்.

மெக்சிக்கோவில் நடைபெறும் உதைபந்தாட்ட போட்டியை காண விமானத்தில் பறந்துகொண்டிருந்த போது, இந்தப் பெயர் மாற்றத்துக்கான உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். மேலும், இம்மாதம் 9ஆம் திகதியை அமெரிக்க வளைகுடா நாள் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (எ)

# "மதுபான கொள்கை கெஜ்ரிவாலை வீழ்த்தி விட்டது"



புதுடில்லி, பெப்.12

"ஆம் ஆத்மி கட்சியின் மதுபான கொள்கை, அரவிந்த் கெஜ்ரிவாலை வீழ்த்தி விட்டது" என சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், " அரவிந்த் கெஜ்ரிவால் அரசியல் கட்சி தொடங்கியபோது, அவர் மீது மக்கள் நம்பிக்கை வைத்து ஆதரவு வழங்கினர். வாக்காளரின் நம்பிக்கை மற்றும் ஆதரவை பெறுவதில் வேட்பாளரின் நேர்மை முக்கிய பங்காற்றுகிறது என கெஜ்ரிவாலிடம் கூறி வந்தேன்.

ஆனால், அவர் அதை கண்டுகொள்ள வில்லை. எதையும் எதிர்பார்க் காமல் மக்களுக்கு சேவை ஆற்றுவது, கடவுளை வழிப டுவது போன்றது. இதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

மக்களுக்கு தன்னலமற்ற சேவை செய்யும் பாதையில் இருந்து ஆம் ஆத்மி விலக ஆரம்பித்தது.

அவர் மதுபான கொள் கையை ஊக்குவித்து, பணத்தின் பின்னால் செல்ல ஆரம்பித்தார். இது அவரையும், அவரது ஆம் ஆத்மி கட்சியையும் வீழ்த்தி விட்டது"- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 6 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி

## முத்தரப்பு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது

லாகூர், பெப்.12

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் தென்னாபிரிக்க அணியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது நியூசிலாந்து அணி.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 304 ஓட்டங்கள் குவித்தது. அறிமுக வீரர் மத்தேயு பிரீட்ஸ்கே 148 பந்துகளில், 11 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 150 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம் அறிமுக போட்டியில் 150 ஓட்டங்களை அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையை படைத்தார் மத்தேயு பிரீட்ஸ்கே.

இதற்கு முன்னர் 1978ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுக வீரராக மேற்கு இந்திய தீவுகளின் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் 148 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. இந்த 47 வருட சாதனையை தற்போது முறியடித்து புதிய சாதனையை படைத்துள்ளார் மத்தேயு பிரீட்ஸ்கே. மேலும், அறிமுக போட்டியில் சதம் விளாசிய 4ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

இதற்கு முன்னர் காலிங் இங்க்ராம், தெம்பா பவுமா, ரீசா ஹென்ட்ரிக்ஸ் ஆகியோரும் தங்களது அறிமுக ஒருநாள் போட்டியில் சதம் விளாசியிருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் வியான் முல்டர் 64, ஜேசன் ஸ்மித் 41, தெம்பா பவுமா 20 ஓட்டங்கள் சேர்த்தனர். நியூசிலாந்து அணி சார்பில் மேட் ஹென்றி, வில் ஓ ரூர்க் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

305 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி டெவான் கொன்வே, கேன் வில்லியம்சன் ஆகியோரது அபாரமான ஆட்டத்தால் 48. 4 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 308 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டெவான் கொன்வே 107 பந்துகளில், 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 97




ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜூனியர் டலா பந்தில் ஆட்டமிழந்தார். தனது 13ஆவது சதத்தை விளாசிய கேன் வில்லியம்சன் 113 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன் 133 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கொன்வே, வில்லியம்சன் ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள் சேர்த்தது. இறுதிக்கட்டத்தில் கேன் வில்லியம்சனுக்கு உறுதுணையாக விளையாடிய கிளென் பிலிப்ஸ் 28 ஓட்டங்கள் சேர்த்தார். முன்னதாக வில் யங் 19, ரொம் லேதம் 0, டேரில் மிட்செல் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். தென்னாபிரிக்க அணி தரப்பில் செனுரன் முத்துசாமி 2 விக்கெட்கள் கைப்பற்றினார். இந்தப் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அந்த அணி முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்திருந்தது.

இன்று 12ஆம் திகதி நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி 14ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் நியூசிலாந்துடன் பலப்பரீட்சை நடத்தும். (எ)

# உள்ளரங்க ரென்னிஸில் சம்பியனானார் அல்கராஸ்




ரோட்டர்டாம், பெப்.12

உள்ளரங்க மைதான ரென்னிஸ் தொடரில் முதல் முறையாக கிண்ணத்தை சுவீகரித்தார் கார்லோஸ் அல்கராஸ்.

நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் ரோட்டர்டாம் ஓபன் உள்ளரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்று வந்தது. இதன் இறுதிப் போட்டி கடந்த 9 ஆம் திகதி இரவு நடைபெற்றது. 3ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், 8ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் மினாருடன் மோதினார். இதில் அல்கராஸ் 6-4, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். (எ)

# ஆசிய பட்மிண்டன் பி. வி. சிந்து விலகல்

புதுடில்லி, பெப்.12

ஆசிய பட்மிண்டன் சம்பியன்ஷிப் தொடரிலிருந்து இந்திய வீராங்கனையான பி. வி. சிந்து விலகியுள்ளார்.

ஆசிய கலப்பு அணி சம்பியன்ஷிப் பட்மிண்டன் போட்டி நேற்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறுகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் முன்னணி வீராங்கனை பி. வி. சிந்து இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில் காயம் காரணமாக பி. வி. சிந்து விலகியுள்ளார். இது இந்திய அணிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

இந்தத் தொடரில் இந்திய அணி கடந்த முறை வெண்கலப் பதக்கம் வென்றிருந்தது. (எ)



# இந்தியாவுக்கு எதிராக நாங்கள் தோற்றாலும் கவலை இல்லை

## இங்கிலாந்து வீரர் சொல்கிறார்

அகமதாபாத், பெப்.12

இந்தியாவுக்கு எதிராக 3 - 0 என்ற கணக்கில் நாங்கள் தோற்றாலும் கவலை இல்லை என்று இங்கிலாந்து வீரர் பென் டக்கெட் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு வருகை தந்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நாக்பூர் மற்றும் கட்டாக் மைதானங்களில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை 2-0 என்ற கணக்கில் ஆரம்பத்திலேயே கைப்பற்றி விட்டது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி அகமதாபாத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த போட்டியில் தோல்வியை தவிர்க்க இங்கிலாந்து போராடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் 3 - 0 என்ற கணக்கில் இத்தொடரில் இந்தியாவிடம் தோல்வியை சந்தித்தாலும் கவலை இல்லை என்று இங்கிலாந்து வீரர் பென் டக்கெட் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பழைய நிலைக்குத் திரும்பி இறுதிப்போட் டியில் இந்தியாவை தோற்கடிக்கும் திறமை தங்களிடம் இருப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.


"நாங்கள் இங்கே சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற ஒரு நோக்கத்துக்காக மட்டுமே வந்துள்ளோம்.

ஒருவேளை 3 - 0 என்ற கணக்கில் இந்தியாவிடம் தோற்றாலும் அவர்களை சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் தோற்கடிக்கும் வரை நாங்கள் கவலைப்படமாட்டோம். இவை அனைத்தும் சரியான நேரத்தில் உச்சகட்ட செயல்பாடுகளை வெளிப்படுத்துவதைப் பற்றியதாகும்.

இந்தியாவுக்கு எதிராக நாங்கள் வெற்றியை மிக அருகில் நெருங்கி னோம். அதனால் இந்தத் தொடரில் நாங்கள் நேர்மறை யான விடயங்களை எப்போதும் எடுத்துக் கொள்கிறோம்"- என்றார். (எ)

# தரம் நிரந்தரமானது

## முரளிதரன் தெரிவிப்பு



மும்பை, பெப்.12

தரம் நிரந்தரமானது, தற்போதைய ஆட்டத்திறன் தற்காலிகமானது என்று விராட் கோலி, ரோஹித் சர்மா குறித்து இலங்கை முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

8 அணிகள் பங்கேற்கும் 9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் முரளிதரன் கூறுகையில், "ரோஹித் சர்மாவும், விராட் கோலியும் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒரு வீரரின் தரம் நிரந்தரமானது, தற்போது அவர்கள் வெளிப்படுத்தும் ஆட்டத்திறன் என்பது தற்காலிகமானது என்று எப்போதும் சொல்வேன்.

எனவே, அவர்கள் துடுப்பாட் டத்தில் முன்னுக்கு வர வேண்டும். ரோஹித் சர்மா இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட் டியில் சதம் அடித்து பழைய நிலைக்கு வந்துள்ளார்.

இதே போன்று கோலியும் பழைய நிலைக்கு வந்துவிடுவார். சம்பியன்ஸ் கிண்ணத்தை இந்தியா வெல்வதற்கு இருவரும் துடுப்பாட்டத்தில் அசத்த வேண்டியது அவசியமாகும்"- என்றார். (எ)

# களத்தடுப்புக்கு மைதானம் வந்த தென்னாபிரிக்க பயிற்சியாளர்




லாகூர், பெப்.12

தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் திடீரென களத்தடுப்புக்கு மைதானத்துக்கு வருகை தந்துள்ளார். முத்தரப்பு ஒருநாள் தொடரில் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இந்தச் சம்பவம் நடந்தது.

நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்றுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி தென்னாபிரிக்காவை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் அணியாக இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முன்னதாக இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து துடுப்பாட்டம் செய்தபோது தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளரான வாண்டில் குவாவு மாற்று வீரராக களமிறங்கினார். இந்த வீடியோ தற்போது வைரலாகியுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசமைப்பு...

மக்களுக்கு வழங்கவில்லை என்பதே உண்மையாகும்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு நிர்ணய சபை அல்லது பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலோ புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு முன்மொழியக்கூடிய சாத்தியப்பாடு உள்ள நிலையில், புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சியை தமிழ்த்தேசமாக எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் என்பது பற்றி நாம் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

யாப்புருவாக்க முயற்சி குறித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. மாறாக இவ்விடயத்தில் நாம் தயார்நிலையில் இருப்பது அவசியமாகும். கடந்த பொதுத்தேர்தலில் வட, கிழக்குவாழ் தமிழ்மக்கள் கணிசமான அளவில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்திருந்தார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

குறிப்பாக வரலாற்றில் முதற்தடவையாக தமிழ்த்தேசியக்கட்சி அல்லாத ஒரு கட்சி வட, கிழக்கில் குறிப்பிடத்தக்களவு ஆசனங்களைப் பெற்றமையை பலரும் கரிசனையுடன் அவதானித்துள்ளனர். அதேவேளை பொதுத்தேர்தல் முடிவுகள், தமிழ்த்தேசிய கருத்தியலை மக்கள் மறுதலிக்கவில்லை என்பதையும், மாறாக அவர்கள் தமிழ்த் தேசியப்பரப்பில் இயங்கிவரும் அரசியல் கட்சிகள் தொடர்பில் அடைந்திருக்கும் சலிப்பே தேசிய மக்கள் சக்திக்கான வாக்குகளாக மாறியிருக்கிறது என்பதையும் புலப்படுத்துகின்றன.

எனவே தேர்தல்கால கூட்டிணைவுகளுக்கு அப்பால், தமிழர் தேசம் முகங்கொடுக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு தமிழ்த்தேசியப்பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இயங்குவது மிகமுக்கியமானதாகும். அதன்படி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக்கட்சிகள் பாராளுமன்றத்தின் ஊடாக முன்வைக்கப்படக்கூடிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் கருத்தொருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதன்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் ஆகியோரால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட முயற்சியானது வரவேற்கப்படவேண்டியதும், ஆதரவு வழங்கப்படவேண்டியதுமான முயற்சியாகும்.

இதற்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிட்டுள்ளமையும், இம்முயற்சியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பங்கெடுக்கத் தயாராக உள்ளமையும் வரவேற்கத்தக்க விடயமாகும். அதன் நீட்சியாக இலங்கைத் தமிழரசுக்கட்சியும் இந்த முயற்சியில் இணைந்துகொள்ளவேண்டும் என நாம் பகிரங்க அழைப்புவிடுக்கிறோம்.

ஏற்கனவே தமிழ் சிவில் சமூக அமையத்தின் பங்கேற்புடன் தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு புதிய அரசியலமைப்பு தொடர்பான பேச்சுகளை ஆரம்பிக்கலாம் என்பதே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நிலைப்பாடாகும்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் பேரவையில் அங்கம்வகிக்காத போதிலும், தமிழரசுக் கட்சியின் வரலாற்று ரீதியான நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், அவை தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவுகளிலிருந்து மாறுபட்டவை அல்ல எனக் கருதுகிறோம்.

இருப்பினும் இம்முயற்சியில் தமிழரசுக்கட்சி பங்குபற்றவில்லை எனும் கருத்து முன்வைக்கப்படுவதனால், காலத்துக்குக்காலம் தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளால் முன்மொழியப்பட்ட நகல் வரைபுகளையும் இப்பேச்சுகளின் உள்ளீடாகப் பயன்படுத்தலாம்.

ஆனால் இப்பேச்சுகள் 2015 - 2019ஆம் ஆண்டுக்கு இடைக்கப்பட்ட காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கையையோ அல்லது அச்செயன்முறையின்போது நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையோ அடிப்படையாகக்கொண்டு அமைய முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

"ஏக்கிய இராச்சிய" எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அம்முன்மொழிவுகளை பொது நிலைப்பாட்டை அடைவதற்குரிய தேடலுக்கான ஓர் உள்ளீட்டு ஆவணமாகக் கருதவேண்டிய அவசியமில்லை.

அதேபோன்று எட்டப்படுகின்ற பொதுநிலைப்பாடானது திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலும், தமிழர் தேசம், சுயநிர்ணய உரிமை, இறைமை மற்றும் வட, கிழக்கு தாயகம் அவர்களது ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பு ஆகிய விடயங்களில் விட்டுக்கொடுப்பின்றியும் அமைய வேண்டும் - என்றுள்ளது. (அ)

## உத்தியோகபூர்வ...

வீட்டை விட்டு வெளியேறுவார் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

## தையிட்டி விகாரை...

செவ்வாய்க்கிழமை போராட்டம் ஆரம்பமானது.

நேற்றைய தினம் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் பல்வேறு தரப்பினரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில், இன்று புதன்கிழமை மாலை 6 மணி வரை தொடரும் இந்தப் போராட்டத்தில் கட்சி பேதங்களைக் கடந்து அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

## 7 ஆயிரத்துக்கும்...

தலைமையில் ஒரு அதிகாரி குழுவை நியமிக்கக் கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

அந்தந்த அமைச்சுகள், அந்த அமைச்சின் கீழ் உள்ள துறைகள் மற்றும் பிற நிறுவனங்களில் வெற்றிடமாகவுள்ள பதவிகளைக் குழுவுக்குப் பரிந்துரைத்துள்ளன.

அதன்படி, அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, குழுவால் முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நோக்கத்திற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்குவதற்காகப் பிரதமர் சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (அ)

## நல்லூரில்...

கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் கந்தன் மஞ்சத்தில் எழுந்தருளி பக்த கோடிகளுக்கு அருள்பாலித்திருந்தார். நல்லூரான் பக்தர்கள் ஆலய வளாகத்தில் முழுவதும் நிறைந்து காணப்பட்டனர். (அ)

## வடக்கு, கிழக்கில்...

நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பதற்காக விரிவான அணுகுமுறை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்படுவதுடன், ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1,500 கிலோமீற்றர்கள் வட மாகாணத்திலும் மற்றும் 500 கிலோமீற்றர்கள் கிழக்கு மாகாணத்திற்கும் முன்னுரிமை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## இன்று மின்வெட்...

இந்தக் கலந்துரையாடலை தொடர்ந்து இன்று மின்வெட்டை அமுல்படுத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் நாட்களில் மின்வெட்டை அமுல்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட திடீர் மின் தடையைத் தொடர்ந்து, நுரைச்சோலை மின் நிலையத்தில் உள்ள 3 மின்மாற்றிகள் செயலிழந்ததால், மின்சார தேவையை நிர்வகிக்கும் பொருட்டு, இலங்கை மின்சார சபை நேற்று முன்தினமும் நேற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒன்றரை மணி நேரம் மின் விநியோகத்தை தடை செய்ய முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கஜேந்திரகுமார்...

இது தொடர்பில் கஜேந்திரகுமார் எம். பி. தெரிவித்தவை வருமாறு,

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனியார் காணிகளை அபகரித்து தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானங்களை அகற்றி மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

"இதன் பின்னர் - "விகாரையை இடிக்க வாரீர்" என்று நான் அழைப்பு விடுத்தமை போன்ற விளம்பரம் வடிவமைக்கப்பட்டு போலியான விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த விடயத்தை அறிந்தவுடனேயே எனது உத்தியோகபூர்வ முகநூல், எக்ஸ் தளங்களூடாக குறித்த செய்தி போலியானது என பதிவிட்டேன். ஊடக சந்திப்பிலும் போலி விளம்பரம் குறித்த எனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

"எனது தெளிவுபடுத்தல்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து வரும் வெள்ளிக்கிழமை அழைப்புக் கட்டளை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது", என்றார். (ஐ)

## மின் தடைக்கு...

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்க தரப்பினர் தாம் ஆளும் தரப்பில் இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே அவர்களின் கருத்துக்கள் பொறுப்புடையவையா அமையவேண்டும். காலையில் ஒரு கருத்தையும் மாலையில் மாற்றுமொரு விடயத்தையும் தெரிவிக்கும் விடயம் உலக நாடுகளின் மத்தியில் எம்முடைய நாட்டை நகைப்புக்கு உள்ளாக்கும் விடயமாக அமையும்.

சர்வதேச ஊடகங்களிலும் கூட குரங்கு மோதியதால் மின் துண்டிப்பு நிகழ்ந்துள்ளது என்ற விடயம் பேசுபொருளாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் பக்கம் குறைபாடுகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை நிவர்த்தி செய்து கொண்டு முன்னோக்கி பயணிக்கவேண்டும். அரசாங்கம் மக்களுக்கு உண்மையை கூறி பிரச்னைக்கான தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார்.

## ஏப்ரல் 24ஆம்...

மணிக்கு முன்னர் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் கிடைக்க வேண்டும். புதிய சட்ட மூலங்கள் தொடர்பான சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளின்படி அதுவே உரிய கால அவகாசமாகும்.

அப்படி கிடைக்கும் உயர் நீதிமன்றத்தின் முடிவை பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்காக எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தை விசேடமாகக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10:30 மணிக்கு தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

அன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 7 மணி வரை உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றம் விசேடமாகக் கூடுகின்றது. அன்றைய தினமே அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவித்தல்களை விடுக்கும் அதிகாரம் அடுத்து வரும் நாள்களில் தேர்தல் ஆணையத்துக்கு வந்து விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை தமிழ் - சிங்களப் புது வருடம் முடிந்து அடுத்த 10 நாள்களில் - பெரும்பாலும் ஏப்ரல் 24ஆம் திகதி நடத்தக்கூடி

யதான தீர்மானம் ஒன்றைத் தேர்தல் ஆணையம் எடுப்பதற்கு இடமளிக்கும் விதத்தில் இந்தச் சட்ட நிறைவேற்ற ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிகின்றது.

2023ஆம் ஆண்டு முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தவேண்டிய நிலையில் அந்தத் தேர்தல் நிலுவையில் உள்ளது. அந்த வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை ஏற்று, தேர்தலை நடத்துவதற்கு வசதி செய்யும் திருத்தச் சட்ட மூலமே தற்போது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, உயர் நீதிமன்ற ஆய்வின் பின்னர் அதன் தீர்ப்பை பெறுவதற்காகக் காத்திருக்கப்படுகின்றது.

அந்தத் தீர்ப்பை இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் கிடைக்கக் கூடியதாக உயர் நீதிமன்றம் அனுப்ப வேண்டும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் நோக்கில் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு விசேடமாக பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார். பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் நேற்று முன் தினம் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16 இன் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதமரினால் சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமைய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மகிந்தவின் சகா கைது!

கொழும்பு, பெப். 12

நவ சிங்கள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டேன் பிரியசாத், டுபாயிலிருந்து நாடு திரும்பும் போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் அவரை பொலிஸார் கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க அறிவித்தார்.

முன்னதாக, டேன் பிரியசாத், டுபாயில் வாகன விபத்தில் இறந்து போனதாக பொய்ப் பிரசாரம் செய்து பதுங்கியிருந்துள்ளார். அதனைத் தொடர்ந்து, அவர் நாடு திரும்பியபோது, கல்கமுவ பொலிஸாரின் பிடியாணையின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்த டேன் பிரியசாத், அரகல போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். (அ)

## புதிய புலனாய்வு பிரிவுகளை அறிமுகப்படுத்துகிறது சி.ஐ.டி.

### சிக்கலான விசாரணைகளை கையாள்வதற்காக

கொழும்பு, பெப். 12

**சிக்கலான விசாரணைகளைக் கையாள்வதில் செயல் திறனை மேம்படுத்துவதற்காக இலங்கை பொலிஸ் அதன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.**

மறுசீரமைப்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவு மற்றும் மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை அடங்கும்.

மேலும், மேல் மற்றும் தென் மாகாணங்கள் தவிர்ந்த அனைத்து மாகாணங்களிலும் மாகாண குற்றப்பிரிவுகள் அமைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றவியல் மற்றும் நிதி விசாரணைகளுக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிதிக் குற்றம் மற்றும் சட்டவிரோத சொத்து விசாரணைகளை மேற்பார்வையிடுவார்.

அதே நேரத்தில் ஆறு சிறப்பு பிரிவுகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், சைபர் கிரைம், மனித கடத்தல், கடல்சார் குற்றங்கள் மற்றும் புலனாய்வு பகுப்பாய்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும். (அ)

## 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைது!

வவுனியா, பெப். 12

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது தோணிக்கல் பகுதியில் 34 வயதுடைய இளைஞர் ஒருவர் 2 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சா மீட்கப்பட்டதுடன் குறித்த இளைஞரும் கைது செய்யப்பட்டார். கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## வாகன இறக்குமதிக்கு தயக்கம் காட்டும் இறக்குமதியாளர்கள்!

கொழும்பு, பெப். 12

இலங்கையில் வாகன இறக்குமதி செய்யக்கூடிய இறக்குமதியாளர்கள், தற்போது வாகன இறக்குமதிக்கு தயக்கம் காட்டி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோதிலும், பெருமளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதில் இறக்குமதியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. வாகன இறக்குமதிகளின்போதான கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் வாகனங்களுக்கான வரி விதிப்பு போன்ற காரணிகளினால் இவ்வாறு இறக்குமதியாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கொள்வனவாளர்களை தேடிக்கொள்வதில் நிலவும் சிரமங்களினால் வாகன இறக்குமதி மந்த கதியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், வாகனம் தேவைப்படுவோர் முன்பதிவு செய்வதன் அடிப்படையில் தற்பொழுது வாகன இறக்குமதியாளர்கள் வாகனங்களை வரையறுக்கப்பட்ட அடிப்படையில் இறக்குமதி செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், இறக்குமதியாளர்கள் ஊடாக வாகனம் கொள்வனவு செய்யப்படும்போது கொள்வனவு செய்வோர் மீது மேலதிக வரி விதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## நீதிமன்றம் சென்றபோது விபத்து பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழப்பு!

### பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் உட்பட இருவர் காயம்

கொழும்பு, பெப். 12

களுத்துறை, அகலவத்தை, கெக்குலந்தல பிரதேசத்தில் பொலிஸ் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார் என அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

புலத்சிங்கள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே உயிரிழந்தார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரொருவரை பொலிஸ் முச்சக்கரவண்டியில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, முச்சக்கரவண்டியில் பயணித்த பொலிஸ் கான்ஸ்டபிளும் 52 வயதுடைய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரும் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக பிம்புர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வவுனியா நெளுக்குளம் முருகன் ஆலயத்தில் பாரம்பரிய முறையில் புதிர் எடுக்கும் நிகழ்வு



வவுனியா, பெப். 12

வவுனியா நெளுக்குளம் முருகன் ஆலயத்தில் தைப்பூச நாளான நேற்று புதிர் எடுக்கும் நிகழ்வு பாரம்பரிய முறையில் இடம் பெற்றது.

நெளுக்குளம் வயல்வெளியில் புதிரெடுத்து மாட்டு வண்டிலில் அவற்றை ஏற்றி மேளதாளம் முழங்க ஆலயத்துக்கு புதிர் கொண்டுவரப்பட்டு அவை உரலில் இடித்து அரிசியாக்கப்பட்டு புதிய பானையில் பொங்கலும் இடம்பெற்றது.

பாரம்பரிய முறையில் இடம் பெற்ற புதிர் எடுக்கும் நிகழ்வை பலரும் கண்டு ரசித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நல்லூரான் தெற்கு வாசல் வளைவு தைப்பூசமான நேற்று திறந்துவைப்பு




படங்கள்: ஐ. சிவசாந்தன்





யாழ்ப்பாணம், பெப். 12

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையில் ஆலயத்தின் தெற்கே உள்ள கோவில் வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார தோரண வாசலான "நல்லூரான் தெற்கு வாசல் வளைவு" நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நெல்மணிகள் நிரப்பப்பட்ட பெட்டகத்தை பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டியில் ஏற்றி கோவில் வீதி வழியாக நல்லூரான் தெற்கு வாசல் வளைவினை அடைந்து தைப்பூச நன்நாளான நேற்று தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12 மணியளவில் வளைவு திறந்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நெல்மணிகள் நிரப்பபட்ட பெட்டகம் நல்லூர் ஆலயத்தினை அடைந்து ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்பட்டது.

இவ் அலங்கார வளைவு சம்பிரதாய, பண்பாட்டு சின்னங்களைத் தாங்கியவாறு தவில் நாதஸ்வரம் இசைக்க, இறையாசியுடன் அலங்கார வளைவுத் திறப்பு விழா இடம்பெற்றது.

அலங்கார வளைவின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு விசேடயாக பூசைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சாதனைத் தமிழன் கலாநிதி ஆறு. திருமுருகன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாநகரசபை முன்னாள் ஆணையாளர் த.ஜெயசீலன், யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் நல்லூர் கந்தன் பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரத்தை எடுத்தியம்பும் வகையில் நல்லூரான் தெற்கு வாசல் வளைவு அமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org